REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 1௨ வியாழன் (16—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 2௨ வெள்ளி (17—12—54) [இதழ் 159

வியாபாரி இல்லாத கடை

கராச்சி, டிச. 13—

பெஷாவர் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தின் உயர்வை உணர்த்துவதற்காக 'டிரஸ்ட்' ஒன்றை அமைப்பதற்கு வடமேற்கு எல்லைப்புற மாகாண கவர்னரான கான் குர்பேர் அலி ரூ. 1,000 நன்கொடை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இந்தத் தொகையைக் கொண்டு, பல்வேறு பொருள்களுடன் கூடிய ஒரு கடை திறக்கப்படும். கடையில் வியாபாரம் செய்பவர் எவரும் இருக்கமாட்டார்; ஆனால், சாமான்களின் விலைப் பட்டியல் மட்டும் இருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

உலக வரலாற்று ஆசிரியர் விளக்குகிறார்

'இராமாயண' எதிர்ப்பில் பண்டிதருக்குப் படும் கருத்து!

தெய்வத்தின்பெயரால்திணித்துள்ள அக்கிரமம் அம்பலம்!

"............இந்தச் சம்பவங்களின் பின்னணி என்னவென்று நாம் கண்டுபிடிக்க வேண்டும்; உதாரணமாக, தமிழ் நாட்டில் 'இராமாயணத்'தைக் கேலி செய்து நாடகங்கள் நடத்தப்படுகின்றன. 'இன்று மட்டுமல்ல, வடநாட்டவர் தென்னுட்டவரை அடக்கி ஆள்வது; அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்படித்தான் செய்து வந்திருக்கிறார்கள்; இப்போதும் சந்தர்ப்பம் கிடைத்தால், வடவர்கள், தென்னுட்டு மக்களை அடிமை கொள்வர்,' என்று, நாடகம் பார்ப்போருக்கு எடுத்துக் கூறுவதற்காகத்தான் அத்தகு கேலி 'இராமாயண' நாடகங்கள் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகின்றன,"

—என்று, பண்டித நேரு, டில்லியில் கடந்த திங்களன்று நடைபெற்ற இந்தி மொழிப் பயிற்சிக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏகலைவனுக்கு இழைத்த கொடுமையை உணர்த்தும் நாடகம்

ஒரிசாவிலும் பாரதக் கலையின் புனிதம் புகைகிறது!

"............இரண்டு நாட்களுக்கு முன் நான் ஒரிசாவிலிருந்த பொழுது, 'ஏகலைவனை'ப் பற்றிய நாடகம் ஒன்றைக் கண்டேன்; இது ஒரு மகாபாரதத்துக் கதை," என்று, பண்டித நேரு கூறி, ஏகலைவனின் வலது கைப் பெருவிரலை துரோணாச்சாரியார் குரு தட்சணையாகப் பெற்ற கதையை, தான் கண்டவாறு எடுத்துக் காட்டிவிட்டு, தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"நான் அந்தச் சம்பவம் குறித்து என் சிந்தனையைச் செலவிடவில்லை. என்றாலும், அது அன்றுமுதல் என்னை வருத்துகிறது;

"ஒரிசாவிலிருக்கிற அந்தப் பழங்குடி மக்கள், இந்தக் கதையை, 'தாங்கள் எப்படி அடக்கி, ஒடுக்கப்படுகிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு உதாரணமாக, இந்த நாடகத்தைப் பயன்படுத்தினார்கள்,' என்று என்னிடம் கூறப்பட்டது. நாம் இத்தகைய பின்விளைவுகளைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்;

"உண்மை என்னவெனில், கடந்த காலத்தில் எழுதப்பட்டுள்ள சரித்திரம் ஒருதலைப்பட்சமானதாகும் என்பதுதான். அதையொட்டி, இன்றுள்ள மக்கள், சம்பவங்களை தங்களிஷ்டப்படியே எழுதிவிடுகின்றனர்;

"இவையெல்லாம், பிறரால் உண்டாக்கப்படுவதாக நாம் எண்ணக்கூடாது; நான், இந்தக் கதையை நினைக்கும்பொழுது, பிறர் தம்மோடு போட்டி போடுவதைத் தடுப்பதற்காக, சிலர் நடந்துகொள்கிற வகையைக் கண்டு எனக்குக் கோபம் வருகிறது;

"எனவே, இந்தப் பிரச்சினையை நாம் வெகு எச்சரிக்கையாகப் பரிசீலிக்க வேண்டும்."

பட்டம் தாணு காவடி!

திருவனந்தபுரம், டிச. 15—

திரு-கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை விமான மூலம் டில்லிக்குப் பயணமானார். அங்கு அவர் திரு-கொச்சியில் உள்ள ம. சோ. கட்சி அரசாங்கத்தின் எதிர்காலம் குறித்து பிரதமர் நேருவுடனும், உள்நாட்டமைச்சர் டாக்டர் கட்ஜுவுடனும் விவாதிப்பாராம்.

பிரதேச காங்கிரசுடன் நெருங்கி ஒத்துழைப்பதாக பட்டம் தாணு பிள்ளையிடம் உறுதிமொழி பெறப்பட்டு, தொடர்ந்து தாணுவின் மந்திரிசபை நீடிக்கும் சாத்தியம் இருக்கிறதெனவும் கூறப்படுகிறது.

1954 அக்டோபர் மாத இறுதி வரை, சொத்து வரியின் மூலம் ரூ. 15,43,140 வசூலாகியது.

போலீசார் உண்ணுவிரதம்

100 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்

கல்கத்தா, டிச. 15—

ஹௌரா மாவட்டத்திலும், மற்றும் சில மாவட்டங்களிலும் மட்டும் ஆரம்பிக்கப்பட்ட போலீசாரின் உண்ணுவிரதம், இப்போது, பாரக்பூர், அவசர சமய போலீஸ் படை, சீல்தா இரயில்வே போலீஸ் ஆகிய இடங்களிலும் பரவிவிட்டதாகக் கூறப்படுகிறது. மற்ற இடங்களிலுள்ள 130 போலீசார் உட்பட மொத்தம் 2,500 போலீசார் உண்ணுவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

ஹௌராவில் உண்ணுவிரதமிருந்து வரும் போலீசாரில் 100 பேருக்குமேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கர் பதவிக்குசீட்டு?

"ஓரவஞ்சனையாக நடக்கிறார்"

"உறுப்பினர்களின் உரிமையை மறுக்கிறார்"

எதிர்க் கட்சியினரின் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

புதுடில்லி, டிச. 15—

"மக்கள் சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகிற வகையில் சபைத் தலைவர் பாரபட்சமின்றி நடந்துகொள்கிற நிலையிலிருந்து வழுவிவிட்டார் என்று ஒத்திவைப்புப் பிரரேபணைகளை அனுமதிக்க ஒப்புவது, கேள்விகளை நிராகரிப்பது போன்ற சபைத் தலைவரின் நடவடிக்கைகளை ஆராய்ந்த பிறகு, சபை கருதுகிறது.

"ஓரவஞ்சனையான நோக்குடன், அங்கத்தினர்களின் உரிமைகளை அவர் அவமதிக்கிறார். அத்தகைய உரிமைகளைப் பறிக்கும் வகையில் முடிவுகள் கூறுகிறார்.

"அரசாங்கத் தரப்புக் கூற்றுடன் ஒன்றி, இதர அங்கத்தினர்கள் தரும் தகவல்களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

"சபைத் தலைவரின் இத்தகு நடத்தை சபை ஒழுங்குடன் இயங்குவதற்கும், மக்கள் அனுபவிக்கிற குறைகள் எடுத்துச் சொல்லப்படுவதற்கும் பேராபத்தை விளைவிக்கக்கூடியதாகும்; எனவே, சபைத் தலைவர் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என சபை தீர்மானிக்கிறது."

இந்த வாசகங்களடங்கிய தீர்மானம் ஒன்றை மக்கள் சபையில் உள்ள 21 உறுப்பினர்கள் சேர்ந்து கையொப்பமிட்டு மக்கள் சபையில் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிகிறது.

வரும் 18-ந் தேதியன்று, சபை அங்கத்தினர்களில் 50 பேர்கள் ஆமோதித்தால், சபையின் விவாதத்திற்கு தீர்மானம் வைக்கப்படும் எனத் தெரிகிறது.

தீர்மானத்தில், ஜே. பி. கிருபளானி (ம. சோ. கட்சி), ஏ. கே. கோபாலன் (கம்யூனிஸ்டு), என். சி. சட்டர்ஜி (இந்துமகா சபை), இன்னும் பலரும் கையொப்பமிட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

1954 மார்ச் இறுதி வரை மொத்தம் 6·30 கோடி பேருக்கு மலேரியாவுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது; மொத்தம் 10·63 லட்சம் பேருக்கு மலேரியா தடுப்பு மருந்துகள் குத்தப்பட்டன.

பெரியார் ஈ. வெ. ரா. சிங்கப்பூர் சேர்ந்தார்

சிங்கப்பூர், டிச. 14—

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ ராமசாமி அவர்கள், ரங்கூனிலிருந்து சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். மலேயாவில் அவர் 15 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பெரியார் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், மலேயா வாழ் தமிழர் தங்களுக்குள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ரயில் விபத்து

3 பேர் கொல்லப்பட்டனர்

பனாரஸ், (காசி) டிச. 15—

ஹாஜிபூர் என்ற இரயில்வே நிலையத்தில் நின்று கொண்டிருந்த ஒரு 'கூட்ஸ்' வண்டியுடன், பிரயாகை 'பாசஞ்சர்' வண்டி மோதியதின் விளைவாக 3 பேர் கொல்லப்பட்டதாகவும், 20 பேர் காயமுற்றனர் எனவும் கூறப்படுகிறது. 'பாசஞ்சர்' வண்டியிலுள்ள ஒரு மூன்றாவது வகுப்புப் பெட்டியும், 'கூட்ஸ்' வண்டியிலுள்ள 6 வாகன்களும் தடம் புரண்டனவாம். கொல்லப்பட்டவர்கள் மூவரும் இரயில்வே சிப்பந்திகள் என்று தெரிகிறது.

கையால் துணிகளுக்கு அச்சு குத்தும் தொழிலைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்திய சர்க்கார், இயந்திரங்கள் மூலம் துணிகளுக்கு அச்சுப் போடுவதை மட்டுப்படுத்துமாறு பருத்தி ஜவுளி உற்பத்தி ஆலைகளுக்கு உத்திரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

வெடி மருந்துக்கு நால்வர் பலி!

கோட்டயம், டிச. 15—

மூணாற்றிலிருந்து சுமார் 30 மைல் தொலைவில் உள்ள அந்த நல்லூரில், கடந்த திங்களன்று, இருவர் ஸ்தலத்திலேயேயும், இருவர் மருத்துவமனைக்குச் செல்கையிலேயும் இறந்துவிட்டனர் எனத் தெரிகிறது.

பாறைகளை உடைப்பதற்காக அந்த வெடி மருந்துகள் வைக்கப்பட்டிருந்தனவாம்.

---

8 லட்சம் டன் சர்க்கரை இறக்குமதியாகும்

"அடுத்த ஆண்டில், கியூபா, சாவகம், பிரிட்டன் போன்ற இதர நாடுகளிலிருந்தும், 66 கோடி ரூபாய் செலவில் சுமார் 8 லட்சம் டன் சர்க்கரை இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும்," என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றின்போது உணவமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின் பதிலளித்திருக்கிறார்.

வெட்டுக்கிளிகளை வணங்கும் சகஜாநந்தர்கள்!

பூஜை போட்டு வெளியேறக் கேட்டுக்கொண்ட விந்தை

நாசிக் மாவட்டத்தில் வெட்டுக்கிளி கூட்டம் கூட்டமாகப் படையெடுத்திருக்கிறது. அப்படையெடுப்பு 'ஆண்டவ'னின் திருப்பணி எனக்கொண்டு, அங்குள்ள ஆதிவாசிப் பெண்கள், வெட்டுக்கிளிக்குப் பூஜை போட்டு, கற்பூரம் கொளுத்தி வழிபட்டுள்ளனர். ஆண்களோ வெட்டுக்கிளிகளுக்கு முன்னர் முழந்தாளிட்டு வணங்கி, அவைகளை வந்தவழியே திரும்பிச் செல்லுமாறு வேண்டிக்கொண்டுள்ளனர்.

வேறு சில இடங்களில் படையெடுத்த வெட்டுக்கிளிகள் பயிர்களை நாசம் செய்வதைப் பார்த்துக் கொண்டு, தடுக்க சக்தியற்றவர்களாக வேதனையுடன் ஆதிவாசிகள் இருந்தனர். அந்த நாசத்தைத் தடுக்க முடியாத அளவில் எண்ணிக்கையில் குறைந்திருந்தனர்.

மற்ற பெரும்பாலான இடங்களில், வெட்டுக்கிளிகள் விரட்டியடிக்கப்பட்டும், கொளுத்தப்பட்டும் உள்ளன.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—12—1954 வியாழன்

ஒருதலைத் தீர்ப்பு!

"1954 ஆகஸ்ட் 11-ம் நாள் தென் திருவாங்கூரில் ஏற்பட்ட அபாயகரமான நிலைமையைச் சமாளிப்பதற்குப் போலீஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் குறித்து, கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் துளியும் ஆதாரம் கிடையாது என்பது, பெறப்பட்ட சாட்சியங்களில் இருந்து உறுதி செய்யப்படுகிறது."

"'தனி தற்காப்பு உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. போலீஸ் படையைச் சேர்ந்தவர்களும்கூட ஒரு மாநிலத்தின் குடிமக்களாவர். எனவே, தங்களுடைய உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படுகின்ற பயங்கரமான சூழ்நிலையில், அவைகளைக் காத்துக்கொள்ளுகின்ற உரிமை அவர்களுக்குக் கிடையாது எனச் சொல்வதற்கில்லை. ஆதலால், ஆகஸ்ட் 11-ம் நாள் தென் திருவாங்கூரில் மூன்று இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தை, அபாயத்தில் சிக்கிக்கொண்ட தம் உறுப்பினர்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய ஒரு சாதனமாகப் போலீஸ் படை மேற்கொண்டது நியாயமானதென ஏற்படுகிறது."

"தமது அதிகார வரம்புக்குட்பட்டு ஒழுங்காகவும் முறையாகவும் போலீஸ் நடந்துகொண்டு நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் பலாத்காரத்தைப் பிரயோகித்து, ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுவதில் போலீஸ் வெற்றி பெற்றிருக்கிறது."

இவ்வாறு பட்டம் தாணுப்பிள்ளை அவர்களின் ம. சோ. கட்சிஆட்சியில், தென் திருவாங்கூரில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைக் குறித்து, விசாரணை செய்த திரு-கொச்சி நீதிபதி கே. சங்கரன், தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஏறத்தாழ இருபது நாட்களுக்கு மேல் பல சாட்சியங்களைக் கேட்டறிந்து, இத்தகைய அறிக்கையை உருவாக்கியுள்ளார் அந்த நீதிபதி.

அறிக்கையில் கூறப்பட்டுள்ள மேற்படி கூற்றுகளைப் பொறுத்தவரையில், நீதிபதி சங்கரன் அவர்களிடம் இதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை, விசாரித்து அறிக்கை வெளியிட அவர் நியமித்த பட்டம் தாணுவும் முன்கூட்டியே அறிந்திருக்கிறார். இந்நிலையில்தான் அவர் விசாரணை முடிவு இருக்குமென்ற உண்மையை, திரு-கொச்சி த. நா. காங்கிரஸ் குழுவினர்களும் அறிந்தே இருக்கிறார்கள். நீதிபதியின் மனப்பாங்கை இரு சாராரும் ஏற்கனவே விளக்கமாகத் தெரிந்துகொண்டிருந்த காரணத்தால்தான், அவர் நியமனத்தைத் துவக்க முதற்கொண்டே, திரு-கொச்சி த. நா. காங்கிரஸ் தலைவர்களும், தமிழர் கோரிக்கையில் அனுதாபங்கொண்ட மற்றவர்களும் தீவிரமாக எதிர்த்து வந்திருக்கிறார்கள். இவ்வெதிர்ப்பு கூடக்கூட, அவரைத்தான் விசாரணை செய்ய நியமிப்பேன் என்ற பிடிவாதமும் பட்டத்தினிடம் உரம் பெற்றது. எனவே, இருபிரிவினரும் எதிர்பார்த்தபடியே, நிரபராதிகளான தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, ஏழு தமிழர்களைச் சுட்டுக் கொன்ற போலீஸ் போக்கைப் பாராட்டியும், உரிமைக் கிளர்ச்சியில் அமைதியாக ஈடுபட்ட திரு-கொச்சி தமிழர்கள் மீது பழி சுமத்தியும், நீதிபதி சங்கரன் அறிக்கையும் வெளிவந்திருக்கிறது.

இப்படி ஒரு பாராட்டு இருந்தே தீரும்—இருந்தே ஆகவேண்டும் என்ற ஒரே நினைப்பில், நீதிபதி சங்கரன் அவர்களை நியமித்தால், போலீஸ் நடத்தையைப் புகழ்ந்து கூறி இருக்கும் அறிக்கையைக் கண்டு, திரு—கொச்சி போலீஸ் துறையோ, பட்டம் தாணுவோ விசேஷ மகிழ்ச்சி கொள்வதற்குத் துளியும் இடமில்லை. அதைப் போன்றே, அறிக்கையில் உள்ள விஷயத்தைக் கண்டு, திரு—கொச்சி தமிழர்கள், திகைப்படையவோ வியப்படையவோ அவசியமும் ஏற்படவில்லை.

ஆகஸ்ட் 11-ம் நாள் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தை விசாரித்தறிய, நியமிக்கப்படும் விசாரணைக் குழுவில், மலையாளிகளையோ, தமிழர்களையோ உறுப்பினர்களாக நியமிக்கக் கூடாது என திரு—கொச்சி தமிழ்த் தலைவர்கள் வேண்டிக்கொண்டனர். இருமொழியினரும், தங்கள் தங்களுக்குள்ள கொள்கைப் பற்றின் காரணமாக, நடைபெற்றுள்ள துப்பாக்கிப் பிரயோகத்தை பற்றற்ற நடுநிலையிலிருந்து ஆராய்வது முடியாது; எனவே, அவர்களைக் கொண்டு ஒரு விசாரணைக் குழுவை உருவாக்கக் கூடாது எனத் தங்கள் முறையீட்டிற்குத் தக்க காரணமும் காட்டினர், பட்டம் தாணுவின் படுகொலைக்கு ஆளான தமிழர் மரபினர்.

அதுமல்லாமல், திரு-கொச்சியைச் சேர்ந்தவர்களும் கூடாது, சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் கூடாது, வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களை மேற்படி குழு உறுப்பினர்களாகக் கொள்ள வேண்டுமெனவும், திரு-கொச்சி தமிழர் சார்பில் கோரப்பட்டது. இக்கோரிக்கை தவறுடையதல்ல. இதை ஒப்புக்கொள்வதால், தென் திருவாங்கூர் துப்பாக்கிப் பிரயோகத்தின் உண்மை கண்டறியப்படுவதற்குப் பாதகமும் ஏற்பட இடமிருந்திருக்காது. இதற்கு மாறாக, சம்பவத்தின் உண்மை வெளியாவதோடு மட்டுமின்றி, அதன் முடிவை, பாரபட்சமற்றது — நியாயமானது என ஒப்புக்கொள்ளும் கட்டாயம், ஆட்சியாளர்களுக்கும் - ஆளப்படுபவர்களுக்கும் ஏற்பட்டும் தீரும்.

தமிழர்களின் நியாயமான கோரிக்கையை ஒப்புக்கொண்டு செயலாற்ற பட்டத்திற்கு விருப்பமில்லை. சம்பவத்தின் உண்மை உள்ளவாறு அறிந்து, ஆட்சிக்கு ஏற்பட்ட களங்கத்திற்குக் கழுவாய் தேடவேண்டும் என்ற நல்லெண்ணம் பட்டத்திற்கு இருந்தால் அல்லவா, தமிழர்களின் நியாயமான அக்கோரிக்கையைஅலட்சியப்படுத்தாமல் ஒப்புக்கொண்டு, அதன்படி செயல்புரிய அவர் முன்வந்திருப்பார்? நிரபராதிகளானத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றதை நியாயமானது எனக் காட்டவும், தமிழர்களின் உரிமைக்கும் அறப்போருக்கும் மாசு உண்டாக்குவதையுமே மூல நோக்கமாகக் கொண்ட பட்டம், தமிழர் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்து, தம விருப்பப்படி முடிவுகூறும் ஒரு மலையாள மொழியினரான நீதிபதி சங்கரன் அவர்களை நியமித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை.

விசாரிக்கப் புகுந்த நீதிபதியின் மனப்பாங்கு தெரிந்திருக்கின்றதாலும், அவரையே நியமிப்பதில் பட்டம் காட்டிய பிடிவாதத்தினாலும், விசாரணை முடிவின் துர்நாற்றத்தை, சம்பவத்தின் விசாரணை துவங்கப்படும் முன்னரே, தமிழ் தலைவர்கள் நுகரத் தொடங்கி விட்டனர். அதன் விளைவாக, விசாரிக்கப் புகுந்த நீதிபதி முன் சாட்சியம் தருவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டதுடன் மேற்படி விசாரணையையும் புறக்கணித்து விட்டனர்.

இதனால் நீதிபதியின் விசாரணை, துவக்கத்திலேயே சுருங்கிப் போகவேண்டியதாகி விட்டது. இன்றியமையாது வேண்டப்படும் சாட்சியங்களின் வாக்குமூலங்களைப் பெறும் வாய்ப்பு, அவருக்கு ஆரம்ப முதலே கிடைப்பது அரிதாகி விட்டது. எனவே, அவருக்குக் கிடைத்துள்ள வாக்குமூலங்கள் அனைத்தும், தமிழ் உரிமையை மறுக்கும் 'நல்லவர்'களிடமிருந்தே கிடைத்துள்ளவைகளாகும் என்பது சொல்லாமலே விளங்கும். அதாவது, தமிழர்களைச் சுட்டுக் கொன்ற போலீஸ் அதிகாரிகளுடையவும், பட்டத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கிடக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள அரசாங்க அதிகாரிகளுடையவும், அரசாங்கத்திற்கு ஒத்து ஊதுவதையே பிறவிப் பேரின்பமாகக் கொண்டு ஒழுகிவரும் பெரிய மனிதர்களுடையவும், இல்லாமைக்கு உடனடி பரிகாரம் பெற்று வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ள எடுபிடிகளினுடையவும் வாக்குமூலங்களைத்தான், மேற்படி நீதிபதி பெற்றிருக்க முடியும் என்பதில் ஒருவருக்கும் ஐயமிருக்க நியாயமில்லை. சாட்சியங் கூறியவர்களில் இரண்டொரு உண்மை விரும்பிகளும் இருந்திருக்கக்கூடும். நீதிபதியின் விசாரணை முடிவை உருவாக்கும் வன்மை அவைகளுக்கு இருக்க முடியாது.

நீதிபதியின் விசாரணைத் துவக்கமே, பிரதிவாதிகளால் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகும். அவர்கள் சார்பு சாட்சியங்களை நீதிபதி அறவே பெறத் தவறிவிட்டார். இந்நிலையில், அவர் அறிக்கையின் முடிவு, எப்படிப்பட்டதாக இருந்த போதிலும், அது ஒருதலைத் தீர்ப்பேயாகும் என்பதை அவரும் ஒப்புக்கொள்ளுவார்—பட்டமும் ஏற்றுக்கொள்ளுவார்.

வாதிகளுடையவும், அவர்கள் சார்பு சாட்சியங்கள் கூறிய வாக்குமூலங்களை மட்டுமே, தக்கதொரு ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு விஷயத்தின் தன்மையை நிர்ணயிப்பது கூடாது என்பது பொது விதி. இம்முறையினால் நியாயாநியாயம் கண்டறியப்படுவதும் முடியாது என்பதையும் உலகு அறியும். உலகறியும் இப்பொது விதியை நீதிபதி அறியார் எனக் கொள்வதற்கில்லை. அறிந்துதான் இந்த அவசர அனர்த்த முடிவைக் கூறி இருக்கிறார் நீதிபதி சங்கரன் அவர்கள்.

பிரதிவாதிகளின் சார்பில் சாட்சியங்களைப் பெறாது, வாதி தரப்பு வாக்குமூலங்களை மட்டுமே ஒரு பொருட்டாகக் கொண்டு திரு—கொச்சி போலீஸ் புரிந்த கோரத் திருவிளையாடல் நியாயமானதுதான் என கூறிவிட்ட நீதிபதி சங்கரன் அவர்களின் அறிக்கைக்கு, அதைத் தாங்கி உள்ள காகிதத்தின் விலை மதிப்பைப் பெறுகின்ற தகுதிகூட அறவே கிடையாது என்பதே நமது கருத்து.

திரு-கொச்சி தமிழர்களின் வாக்குமூலங்களைப் பெற்று ஆராயாமலே, அவர்கள் மீது மாசு கற்பிக்கும் நீதிபதியின் முடிவு, அத்தமிழர்களின் புண்பட்ட நெஞ்சை மேலும் வலிகொள்ளவே வைக்கும் என்பதில் ஐயமில்லை. அவரை, அத்தமிழர்கள் என்றும் மறவார் என்பதும் நிச்சயம்.

இந்தத் தீர்ப்பு, ஏற்கனவே, தென் திருவாங்கூரில், மலையாளிகள் தமிழர்கள் ஆகிய இருசாராரிடையேயும் நிலவி வரும் மனக்கசப்பைக் கூடுதலாக்குமேயன்றி குறைப்பதற்கு வழி செய்யாது. அதன்படி பார்த்தால் நீதிபதியின் இத்தீர்ப்பு வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

சர்க்கார் அனுமதியின்றி கடன் கொடுத்தனர்

அதிகார எல்லையை மீறி, தலைவர் நடந்துகொண்டுள்ளார்

தொழில் மூலதன உதவி நிறுவனத்தின் ஊழல்கள்

புதுடில்லி, டிச. 14—

"தொழில் மூலதன உதவி நிறுவனத்தின் தலைவர், தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறி நடந்துகொண்டிருக்கிறார்,"

—என்று, மேற்படி நிறுவனத்தின் 1953—54-ம் ஆண்டு தணிக்கை அறிக்கை கூறுகிறது.

சர்க்காரின் முன் அனுமதி பெற வேண்டிய இனங்களில் அனுமதி பெறாமல் கடன் கொடுத்தல், ஒரே நாளில் கொடுக்கப்பட்ட கடன்களிடையே வட்டி விகிதத்தில் காணப்படும் மாறுபாடு ஆகிய ஒழுங்கீனங்கள் தொழில் மூலதன உதவி நிறுவனத்தில் நடைபெற்றிருக்கின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"மூலதனத்தை விருத்தி செய்யவும், டிபெஞ்சர்கள் மூலம் நிதி திரட்டவும் வசதி உள்ள நிலையங்களுக்கும் கடன் அளிக்கப்பட்டுள்ளது; சில இனங்களில் கொடுக்கப்பட்ட கடன், அபாய எல்லையினைத் தாண்டியிருக்கிறது," என்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், இந்த நிலையம், சர்க்காரினால் அமைக்கப்பட்டது.

மானேஜிங் டைரக்டர், தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைவிட அளவுக்கு மீறிய அதிகாரங்களைக் கையாண்டிருக்கிறாராம்.

1954-ம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற மேற்படி நிறுவனத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில், மானேஜிங்-டைரக்டருடைய ஒழுங்கீனங்கள் அனைத்தும் அப்படியே ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதாம்.

சர்க்காரின் அனுமதி பெறும் அவசியம் உள்ளபோதும், அப்படி அனுமதி பெறாமல் தொழில் மூலதன உதவி நிறுவனம், தன் இச்சைப்படி நடந்துகொண்டிருக்கிறதாம்.

சில இனங்களில் வர்த்தக அமைச்சராலயத்தின் சிபார்சுகளைப் புறக்கணித்து விட்டு கடன் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

எண்ணெய்க் கம்பெனி ஒன்றுக்குக் கடன் தருவது அவசியம் இல்லை என்று டைரக்டர்—ஜெனரல் கருதினராம்; ஆனால், தொழில் நிறுவனம் ஒரு எண்ணெய்த் தொழிற்சாலைக்கு ரூ. 1,75,000 கடன் தந்தது என்றும், பின்னர் அக்கம்பெனி மூடப்பட்டது என்றும், அதன் சொந்துக்களை நிறுவனம் தன தாக்கி இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்துஸ்தான் நேஷனல் கண்ணாடி தொழிற்சாலைக்கு கடன் தருவது அவசியம் இல்லை என்று சர்க்கார் சிபார்சு செய்தார்களாம்; ஆனால், சர்க்காரின் முடிவை எதிர்பார்க்காமல், இக்கம்பெனிக்கும், ஜெய் எஞ்சினியரிங் தொழிற்சாலைக்கும் தொழில் மூலதன உதவியை, அந்த நிறுவனம் கடன் அளித்ததாம்.

பிரிமியர் ஆட்டோமொபைல்ஸ் கம்பெனிக்கு ரூ. 45 லட்சம் கடன் தரப்பட்டது என்றும், புதிய முறைகளை மேற்கொள்ள அளிக்கப்பட்ட இக்கடனில், கம்பெனியார், ரூ. 10 லட்சத்தை மூலதனமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றும், இது, நடைமுறைக்கு விரோதம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"கொடுக்கப்படும் பணத்திற்கு ஈடாகக் கருதப்படும் கம்பெனியின் சொத்துக்களின் மதிப்பு 50 சத விகிதத்திற்குக் குறைவாகவே இருக்கிறது,"

என்று, தணிக்கை அறிக்கை கூறுகிறது.

கம்பெனியின் சொத்துக்களின் மதிப்பு கடன் பெற்றவுடன் உயர்ந்து விடுமென்றும், ஆகவேதான் இப்படி கடன் கொடுக்கப்படுகிறது என்று காரணம் காட்டப்பட்டுள்ளது," என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

வட்டி விகிதத்தில் ஒரே விகிதாச்சாரம் இல்லையென்றும், ஒரே நாளில் ஒரே சமயத்தில் கொடுக்கப்பட்ட கடன்களுக்குப் பல்வேறு வட்டி வீதங்கள் காணப்படுகின்றனவென்றும், இப்படி வட்டி வீதங்களில் காணப்படும் மாறுதல்களுக்கு எதுவுமே காரணம் காட்

(4-ம் பக்கம் பார்க்க.)

25,000 டாலர் அதிகம் கொடுத்து எண்ணெய்க் கப்பல் வாங்கினர்

பாட்டரி தயாரிக்கும் மூலப் பொருள்கள் வாங்கியதில் ஒரு லட்ச ரூபாய் நஷ்டம்

பாதுகாப்பு இலாகா சர்வீசுகள் ஊழல்கள் பற்றி தணிக்கை அறிக்கை

"இத்தாலிய எண்ணெய்க் கப்பல் ஒன்றை வாங்குவதில் 25,000 டாலர்கள் அதிகமாக இந்தியாவினுல் கொடுக்கப்பட்டிருக்கிறது. லண்டனில் உள்ள அதிகாரம் பெற்ற அதிகாரியின்மூலம் இந்த பேரம் பேசப்படாமல், இத்தாலியில் உள்ள தூதுவராலயம் நேரடியாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டதால் இவ்வாறு 25,000 டாலர்கள் அதிகம் கொடுக்கவேண்டி வந்தது."

"ஈரமில்லாத 'பாட்டரி'கள் தயாரிக்கும் வகையில், அதுபோன்ற 'பாட்டரி'களைத் தயார் செய்ய முடியுமா என்று பர்ட்சை செய்யாமலேயே பாதுகாப்பிலாகா, 28,000 பாட்டரிகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்கிவிட்டது. பின்னர், 'பாட்டரி'கள் தயாரிக்க முடியாமல் போகவே, இதன்மூலம் சுமார் ஒரு லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது."

—என்று, பாதுகாப்பு இலாகாவின் 1954-ம் ஆண்டின் தணிக்கை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

"1952—53-ம் ஆண்டில் சேமிப்பு பற்றிய பாதுகாப்பு இலாகா வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதில் சுமார் ரூ. 25 கோடி சம்பந்தப்பட்ட கணக்கில் அலட்சிய மனப்பான்மை காணப்படுகிறது," என்று தணிக்கை அறிக்கை மேலும் கூறுகிறது.

மேற்படி அறிக்கையை பாராளுமன்றத்தில் அமைச்சர் வ. சி. குகா விவாதத்திற்கு வைத்தார்.

"1952—53-ம் ஆண்டில், கணக்குகளில், முக்கியமான ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன," என்று அறிக்கையில் சொல்லப்படுகிறது.

"கையிருப்பில் உள்ள சாமான்களுக்கு சரியான கணக்கு வேண்டும்; குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை அவை சரியாக இருக்கின்றனவா என்று சரி பார்க்க வேண்டும் ;—என்ற முக்கியத்துவத்தை பாதுகாப்பு இலாகா சர்வீசுகளில் உணர்ந்ததாகத் தெரியவில்லை,"

என்று தணிக்கை அறிக்கை குற்றம் சாட்டியிருப்பதுடன், கையிருப்பில் உள்ள சாமான்களில் ஏராளமான பணம் முடக்கப்படுகிறது என்றும், ஆகவே, அச்சாமான்கள் சரியாக இருக்கின்றனவா என்று அடிக்கடி சரிபார்ப்பது அவசியம் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

சரியான மதிப்பீடு தயாரிக்காமலும், தொழில் நுணுக்க அனுமதியின்றியும் தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்றப்படுவது வழக்கமாகிவிட்டதென்றும், இப்படி தொடர்ந்து நடைபெறும் ஒழுங்கீனம் தடுக்கப்பட வேண்டும் என்றும்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'சாமான்கள் தேவை' என்று கொடுக்கப்பட்ட ஆர்டர்கள் பல, கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டன வென்றும், இதன் மூலம் வெளிநாட்டுக் கம்பெனிகள் பலவற்றிற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டி வந்தது என்றும், சிலநேரங்களில் தேவைப்படாத பொருள்கள் ஏராளமாக கையிருப்பில் குவிந்து விட்டன என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளின் உதவியுடன் பல புதிய வெடிமருந்து தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன என்றும், ஆனால், இவைகள் பலவற்றில் கடைசி நேர மாறுதல் செய்யப்பட்டதால் அவைகள் இப்போது பயனற்றுப் போயுள்ளனவென்றும் ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் இன்னமும் போதுமான மின்சார சக்தி கிடைக்காததால் வேலையே துவங்கவில்லை என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

"வெளிநாட்டுக் கம்பெனிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ஒன்றில், போதுமான விபரங்கள் குறிக்கப்படாமல், எப்படி சுமார் 2¼ கோடி ரூபாய் கணக்கிடப்பட்டதெனத் தெரியவில்லை," என்று தணிக்கை அறிக்கை கூறுகிறது.

ஒரு கம்பெனிக்கு முன்பணம் ரூ. 42.36 லட்சம் கொடுக்கப்பட்டது என்றும், பின்னர் ஒப்பந்தத்துக்கு மாருக சுமார் 16 கோடி ரூபாய் ரசீது இல்லாமல் கொடுக்கப்பட்டது என்றும் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

"ஒப்பந்தப்படி, இக்கம்பெனி, போதுமான இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்கவில்லை" என்றும் அறிக்கை கூறுகிறது.

"தற்கால முறைப்படி வெடிமருந்துகள் தயாரிக்க செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி, 1951 எப்ரல் 1-ம் தேதியே தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கியிருக்கவேண்டும் ; ஆனல், இன்று வரை தொழிற்சாலையில் முழு வேலை துவங்கவில்லை," என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்திய ரயில்வேக்கள், 1954 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து அக்டோபர் 31-ந் தேதிவரை உள்ள காலத்தில் பல்வேறு ரயில்வேக்களில் டிக்கெட்டில்லாமல் பிரயாணம் செய்தவர்களிடமிருந்து மொத்தம் ரூ. 15,48,682 வசூலித்தன.

ரஷ்யாவின் காகித உற்பத்திக் குறைவு

'பிராவ்டா' கண்டனம்

லண்டன்—

சோவியத் ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சி இதழான 'பிராவ்டா,' ரஷ்யாவில் காகிதம், செய்தித்தாள் அச்சடிக்கும் காகிதம் இவைகளின் உற்பத்திக் குறைவுக்குக் காரணமான ரஷ்ய காகிதத் தொழில் மந்திரி சபையை, வெகுவாகக் கண்டித்துள்ளதாக மாஸ்கோ வானொலி ஒலிபரப்பியதாம்.

"காகித உற்பத்தி, தேவையான அளவைக்காட்டிலும் மிகக் குறைவாக இருக்கிறது. மேலும், சில ரகக் காகிதங்கள் தரத்திலும் மட்டமானவையாயுள்ளன" என்றும் 'பிராவ்டா' குற்றம் சாட்டியுள்ளதாம்.

"யுத்தத்தின்போது ஏராளமான காகித உற்பத்திசாலைகளுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டிருந்தவை பழுது பார்க்கப்பட்டு, புதிய இயந்திர சாதனங்கள் தரப்பட்டிருந்தாலுங்கூட, சம்பந்தப்பட்ட மந்திரிசபை காகித உற்பத்திக்கான தீவிர புதிய முறைகளைக் காணுவதில்மிதமாகவே இருந்துவந்திருக்கின்றனர்," என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளதாம்.

ஆலைகளுக்குத் தேவையான மரச் சாமான்களைத் தரத் தவறிவிட்டதாக, இதர தொழில் இலாக்காக்களின் மீதும் தனது கண்டனத்தை, அப்பத்திரிகை ஏவியுள்ளதாகத் தெரிகிறது.

நாகை வட்ட தி. மு. க. கிளைகட்கு :

"நாகப்பட்டினம் தாலுகா தி. மு. கழகக் கமிட்டியை கடந்த 5—12—54ல் திருத்தி (புதுப்பித்து) அமைத்திருப்பதினுலும், நாகை தாலுகா தி. மு. க.-வின் ஆக்கவேலைகள் குறித்து சிலபல ஏற்பாடுகள் செய்யவேண்டி இருப்பதாலும், நாகை தாலுகாவில் உள்ள எல்லா தி. மு. கழகக் கிளைகளும், தங்கள் முழு முகவரியும், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகியவர்களின் பெயரையும் விபரமாய் எழுதி, தங்கள் கிளைக் கழகத்தை நாகை தாலுகா கழகத்தில் (வட்டக் கழகத்தில்) பதிவு செய்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்" என்று செயலாளர் கே. கே. சித்திரவேலு அறிவிக்கிருர்.

குறிப்பு :— நாகை வட்டத்தில் மொத்தம் உள்ள கிளைகளின் எண்ணிக்கையைத் தெரிந்து கொள்ளவேண்டியிருப்பதாலும், கிளைகள் எந்தெந்த ஊர்களில் இல்லை என்பதையும் தெரிந்து கொண்டால் புது கழகம் நிறுவ ஏற்பாடு செய்யவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளமையாலும் தோழர்கள் உடனடியாக, விபரங்களை நாகப்பட்டினம் கிளைக்குஎழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

முகவரி :— கே. கே. சித்திரவேலு, நாகை வட்டக்குழு செயலாளர். நாகை.

ரூ. 8 கோடி செலவில் புதிய ரயான் ஆலை

பம்பாயில் துவங்குகிறது !

பம்பாய் மாநிலத்தில், ரூ. 8 கோடி செலவில் ஒரு புதிய ரயான் நூல் ஆலை அமைக்கக்கூடும் எனத் தெரிகிறது.

இந்த ஆலை இத்தாலியக் கம்பெனியான 'சினியாவிஸ்சோசா' என்ற நிறுவனத்தின் கூட்டுறவுடன் பட்டு நூல் நெசவாலைகள் சங்கத்தாரால் ஆரம்பிக்கப்படுகிறது.

இந்த ஆலை வரும் ஜனவரியில் பதிவு செய்யப்பட்டு, அடுத்த இரண்டாண்டுகளில் உற்பத்தியைத் துவங்கும். இங்கு தினம் 10 டன் ரயான் நூலும், 10 டன் 'ஸ்டேபில் பைபரு'ம் உற்பத்தியாகுமாம்.

இந்தியா முழுவதுமாக தினம் 60 டன் ரயான் நூல் உபயோகிக்கப்படுகிறது எனத் தெரிகிறது.

டீசல் லாரி உற்பத்தி

புதுடில்லி, டிச. 14—

'டீசல்' எண்ணெய் கொண்டு ஓடும் 'லாரி'களை இந்தியாவிலேயே தயாரிப்பது பற்றி 'டெல்கோ'வுக்கும் ஜெர்மன் கம்பெனியான 'டெய்ம்லர்-டென்சு'க்குமிடையில் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாகவே முடிந்துள்ளனவென்றும் மொத்த மூலதனத்தில் 30 சதவிகிதத்தை ஜெர்மன் கம்பெனியார் ஈடு செய்வார்கள் என்றும், தற்போதைய உற்பத்தித் திட்டப்படி இன்னும் நான்கு ஆண்டுகளில் முழு உற்பத்தி ஆகிவிடுமெனவும் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

புகையிலை அபிவிருத்தி

இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் புகையிலை விவசாய அபிவிருத்திக்கு ரூ. 1,14,50,000 செலவு செய்ய இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாக அதிகாரபூர்வமாகத் தெரிகிறது.

இதற்கான திட்டம் தீட்ட ஆந்திரா, ஐதராபாத் மாநில விவசாய இலாகா தலைமை அதிகாரிகளைக் கொண்ட ஒரு துணைக் குழுவினை இந்திய புகையிலைக் குழுவினர் நியமித்துள்ளனராம்.

உயர்ந்த ரகப் புகையிலை விளைவது, ஆந்திராவிலும் ஐதராபாத்திலும் தான்.

பெனிசிலின் ஊசி மருந்துக்கு இருவர் பலி!

பாகிஸ்தான் அரசாங்கம் விசாரணை செய்கிறது

டாக்கா, டிச. 15—

இங்குள்ள பிரபல வர்த்தகரான ஏ. ஆர். சௌத்ரி என்பவர், பெனிசிலின் ஊசி ஒன்று குத்தப்பட்டதும் இறந்துவிட்டதையொட்டி, அதிகாரபூர்வமான விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் பாகிஸ்தான் சுகாதார இலாகா விசாரணையின் முடிவு தெரியும் வரையில், அந்தக் குறிப்பிட்ட ரக பெனிசிலின் மருந்து உபயோகத்தை நிறுத்தி வைக்குமாறு உத்திரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

விசாரணை, நிபுணர்களடங்கிய குழு ஒன்றினல் நடத்தப்படுமாம்.

இதே மாதிரியாக் சென்ற வாரத்திலும்,பெனிசிலின் ஊசி போட்டுக் கொண்ட மற்ருெருவரும் மாண்ட சம்பவமும் இப்போது தெரியவருகிறதாம்.

'பெனிசிலின்' மருந்து விற்பனையாளர்கள் எல்லாம், முன்னெச்சரிக்கையுடன் இருந்துவருகின்றனராம்.

பெயர் மாறுகிறது!

பாகிஸ்தானில் கிழக்கு வங்க மாநிலத்தின் தலைநகராயிருக்கும் டாக்கா நகரின் பெயரை 'ஜெகாங்கீர் நகர்' என மாற்றுவது என்று டாக்கா நகரசபைக் கூட்டமொன்றில் முடிவாகியுள்ளதாம்.

டாக்கா நகரம் முகலாய மன்னரான ஜெஹாங்கீர் என்பவரால் உருவானதையொட்டியே அவரது பெயர் நகரத்திற்குத் தரப்படுகிறது.

17-ம் நூற்றாண்டில், டாக்கா, வங்கத்தின் தலைநகராயிருந்தது பின்பு, அடுத்த நூற்றாண்டில், மிகச் சிறந்த 'மஸ்லின்' துணி நெசவுக்குப் பெயர் போனதாயிருந்தது ; பின்னர், இந்த நூற்றாண்டில், 'மஸ்லின்' துணி உற்பத்தி, இப்போதும் சிறிதளவு இருந்தபோதிலுங்கூட வெகுவாகக் குறைந்துவிட்டது.

இப்போது டாக்காவைத் தலைநகராகக் கொண்ட கிழக்கு வங்கம், கிழக்கு பாகிஸ்தானுக பெயர் மாற்றப்படுகிறது.

881 எஞ்சினீயர்கள் ; 162 டாக்டர்கள் !

வேலை இல்லாதோர் பட்டியலில் இடம் பெறுகின்றனர்

இந்தியாவில் உள்ள வேலை தேடித் தரும் நிறுவனங்கள் மூலமாக, 881 எஞ்சினீயர்களும், 162-டாக்டர்களும், வேலை தேடித் தருமாறு கோரியுள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

இவர்கள் கடந்த அக்டோபர் 1954 வரை வேலையின்றித்தானிருக்கிருர்கள். நாட்டில் உள்ள சுமார் 127 வேலை தேடித் தரும் நிறுவனங்கள் மூலம் அவர்கள் வேலை கேட்டுள்ளனராம்.

இத்தகவலை, ராஜ்ய சபையில் உதவி தொழிலாளர் மந்திரி அபித் அலி கேள்வி ஒன்றுக்குப் பதிலாகத் தந்துள்ளார் எனத் தெரிகிறது.

வால்டா நதி மீது பாலம்

805 அடி நீளம் ; 7,50,000 பவுன் செலவு ; 1,200 டன் இரும்பு உபயோகம்

கோல்டு கோஸ்டில் அடோமி என்ற இடத்தில், வால்டா நதி மீது பாலம் கட்டும் பொறுப்பை ஓர் பிரிட்டிஷ் ஸ்தானம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.. இந்தப் பாலம் கட்ட சுமார் 1,200 டன்கள் இரும்பு உபயோகிக்கப்படும். பாலத்திற்கு வரும் உள்வாய்—ரஸ்தா உள்பட நிர்மாணச் செலவு 7,50,000 பவுன்களாகும். 805 அடி நீளமுள்ள ஒற்றைக் கண் இரும்புப் பாலம் இது. 1956-ம் ஆண்டுத் துவக்கத்தில் பாலம் பூர்த்தியடைந்துவிடக்கூடும்.

கண்பார்வை இழந்தவர்களைக் கண்காணிக்க ....

ஏராளமான பள்ளிகள் தேவை

முன்னுள் முதன் மந்திரி ஆச்சாரியார் கூறுகிருர்

சென்னையை அடுத்த பூந்தமல்லியில் உள்ள சர்க்கார் குருடர் பள்ளியின் 24-வது வருடாந்திர விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. சி. இராசகோபாலாச்சாரியார், பள்ளித் தலைவருடையவும், ஆசிரியர்களுடையவும் சேவையைப் பாராட்டி, தொடர்ந்து பேசியதாவது :—

"கண் பார்வை இழந்தவர்களுக்கு, இப்போது தரப்படும் கல்வி முறை தொடர்ந்து நடைமுறையிலிருக்க வேண்டுவது அவசியந்தானென்ருலும், கண் பார்வை இழந்தவர்களில் ஏழைகளாக, அனுதைகளாக, கவனிப்பாரற்று இருப்பவர்கட்கு ஏதேனும் கைத்தொழில் கற்றுத் தருகிற வகையில், புதிய போதனு முறைகள் காணப்பட வேண்டும்."

"நாட்டிலே கண்பார்வை இழந்தவர்களைக் கண்காணிக்கவும், அவர்களைக் காப்பாற்றவும் ஏரானமான பள்ளிகள் தேவை. அவைகளில் போதுமான அளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இருக்க வேண்டும். குறிப்பாக, கண் பார்வை இழந்தவர்களில், குழந்தைகளாக இருப்பவர்கள் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களாகும்."

ஆசிய நிலக்கரி உற்பத்தி

திருப்திகரமானதாயில்லை !

"ஆசியாவிலேயே அதிகமான நிலக்கரி உற்பத்தி செய்கிற இந்தியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும், நிலக்கரி சுரங்க வளம் எவ்வகையாலும் அதிகரிக்கக் கூடியதாயில்லை," என ஆசிய, தூரக் கிழக்கு நாடுகளுக்கான, ஐ. நா.-வின் பொருளாதாரக் குழுவின் 1953—54ம் ஆண்டுக்கான அறிக்கை கூறுகிறது.

என்ருலும், 1952-ம் ஆண்டில் 860 லட்சம் டன் உற்பத்தி செய்த அந்தப் பகுதி நாடுகள், 1953-ல், 890 லட்சம் டன் உற்பத்தி செய்துள்ளனவென்று தெரிகின்றது.

இந்த அதிக உற்பத்தி ஜப்பான் நாட்டில் செய்யப்பட்டதாகும். அங்கு 1954-ம் ஆண்டில் உற்பத்தியாகுமென மதிப்பிடப்பட்டுள்ள நிலக்கரி உற்பத்தி, மறுபடியும் 1952-ம் ஆண்டு அளவிற்குக் குறைந்துவிடக் கூடுமெனத் தெரிகிறது.

ஆதரிப்பாராம்!

திரு-கொச்சியில், பட்டம் மந்திரி சபை தொலைந்து, காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைத்தால், திரு-தமிழ் நாடு காங்கிரஸ் அதை ஆதரிக்குமென திரு-தமிழர் தலைவர் நேசமணி கூறியிருக்கிருராம்.

இப்படியும் நடக்கிறது!

திரு—கொச்சி மாநிலத்திலுள்ள தோட்டப்பள்ளி எனும் இடத்தில் ஒரு வடிகால் அணையை அண்மையில் திரு—கொ. முதன் மந்திரி பட்டம் தாணு திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சி குறித்து அங்குள்ள ஈழவ மக்களிடையே பெரியதோர் மனத்தாங்கலை உருவாக்கியிருக்கிறது. காரணம், முதன் முதலாக அந்த அணைக்குக் கல் நாட்டியவரான முன்னாள் முதலமைச்சர் சி. கேசவன் இருக்க, இப்போது அணைக்கட்டில் செதுக்கப்பட்டிருக்கும் பெயர் விபரப் பட்டியலில், அவரது பெயர் காணப்படாமலிருப்பதோடு, பட்டம் தாணு, எஞ்சினீயர்கள், கண்டிராக்டர்கள் ஆகியோர் பெயர்களெல்லாம் செதுக்கப்பட்டிருக்கின்றனவாம். (திரு. சி. கேசவன் ஈழவர் என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராம்.)

இதுபற்றி 13—12—54 'தினமலர்' இதழில் (தலையங்கப் பகுதியில்) வேடிக்கையாக எழுதியிருப்பதாவது:—

"......கல்லில் எழுதாவிட்டாலும் தண்ணீரில் எழுதியாகிவிட்டது என்று காரணம் கூறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை; அல்லது கேசவனின் பெயர் அஸ்திவாரத்தோடு மூடப்பட்டிருக்கிறதா என்பதைத் தோண்டிப் பார்த்தால் உண்மை புலப்படும்!"

மேலும் ஒரு எம். எல். ஏ. கைது

அண்மையில் திரு-கொச்சி மாநிலத்தில் நடைபெற்ற திரு-தமிழக இணைப்புப் போராட்டத்தைக் காரணங்காட்டி, நாகர்கோவிலைச் சேர்ந்த டானியேல், எம். எல். ஏ., போலீசாரால் கைது செய்யப்பட்டு, நாகர்கோவில் கோட்டாறு போலீஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார். சென்ற சில திங்களாக இவர் திரு-கொச்சி மாநில எல்லைக்கு வெளியே இருந்துவந்தார் எனவும் கூறப்படுகிறது.

கள்ளச்சாராயக் கிடங்கிலிருந்து கண்ணாடி வீச்சு

பம்பாய் கோட்டைப் பிரதேசத்திலுள்ள கிடங்கொன்றில், சிலர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகக் கேள்வியுற்ற போலீசார், அந்த இடத்திற்குப் பக்கத்தில் வருகையில், கிடங்கின் உள்ளிருந்துகொண்டே சிலர், போலீசார்மீது கண்ணாடித் துண்டுகளையும், தட்டுகளையும் வீசினராம். உடனே போலீசார் தங்கள் தற்காப்புக்காகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். ஆனால் துப்பாக்கிப் பிரயோகத்தால் யாரும் காயமுறவில்லையாம்.

பின்னர், போலீசார், கிடங்கின் கதவுகளைத் திறந்துகொண்டு உள் நுழைந்து இரண்டு பேரைக் கைது செய்ததோடு, சிறிது சாராயத்தையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா, கொச்சி ஆகிய முக்கிய துறைமுகங்கள் நவீன முறையில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

கடன் ஒத்திவைப்புச் சட்டத்திற்கு மாற்றம்

காங்கிரஸ் குழுவின் சிபாரிசு!

"கடன் ஒத்திவைப்புச் சட்டம், இப்போதிருக்கிற உருவத்திலே இல்லாமல், ரூ. 250-க்கும் குறைவாக கிஸ்தி செலுத்துகின்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடியதாயுள்ள வேறொரு சட்டமாக இயற்றப்பட வேண்டும்."

இவ்வாறு, வெகு விரைவில் காலாவதியாகவிருக்கிற கடன் ஒத்திவைப்புச் சட்டம் பற்றி ஆலோசிக்க நியமிக்கப்பட்ட சென்னை சட்டசபை காங்கிரஸ் குழு, சென்னை சர்க்காருக்கு 'தற்காலிக' சிபாரிசு ஒன்றைச் செய்துள்ளதாம்.

அக்குழு மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"ரூ. 250-க்குக் குறைவாக கிஸ்தி கட்டும் விவசாயிகள், தங்கள் கடன்களை ஐந்து வருடத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க வசதி செய்யலாம்; ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைக்க, நடுநிலைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும்."

இச்சட்டத்தினால் நிவாரணம் அளிக்கப்படுவதற்குத் தகுதிபெற்ற விவசாயிகள் யார் யார் என்பது பற்றியும், அப்படி அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரணங்களின் தன்மைகள் பற்றியும் இக்குழு ஆலோசித்துள்ளது எனத் தெரிய வருகிறது.

அடுத்த ஆண்டு பிப்ரவரி 5-ந் தேதியோடு காலாவதியாக இருக்கும் இச்சட்டத்தை, அத்திங்கள் இறுதி வரைக்கும் நீடித்து வைக்க வேண்டுமென்று குழுவினர் கருதுவதாகவும், அதற்கிடையில், புதிய மசோதாவினைத் தயார் செய்து சட்டசபை 'பட்ஜெட்' கூட்டத்தில் சமர்ப்பிக்கலாமென்றும், அக்குழு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

சென்னைக்கு குடிநீர் வசதி

மேலும் அதிகரிக்க யோசனைகள்

சென்னை நகரில் வினியோகிக்கப்பட்டு வரும் குடிதண்ணீர் பிரச்சினையில் நிரந்தரமான ஒரு பரிகாரம் காண்பதற்காகப் புதியதொரு திட்டம் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பூண்டிக்கு வடக்கிலுள்ள ஆரணி ஆற்றில் ஒரு நீர்த்தேக்கமும், அணைக்கட்டும் அமைக்கும் விஷயம் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நீர்ப்பாசனத் தேவை நீங்கலாக உபரியாக தேங்கிக் கிடக்கும் நீரில் ஒரு பகுதியை நகர குடி தண்ணீர் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆரணி ஆற்றின் குறுக்கே அமையப்பட இருக்கும் சுரதப்பள்ளி அணைக்கட்டிலிருந்து புழலேரிக்கு 32 மைல் தூரம் தண்ணீர் கொண்டுவர குழாய்கள் அமைக்க நகரசபை முன்வருமானால், இத்திட்டத்திற்கு சுமார் 2 கோடி 20 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வளவு செலவுகள் செய்து திட்டங்களை வகுத்தாலும் போதுமான அளவு பலன் கிட்டுமா என்பது சந்தேகத்தில்தான் இருக்கிறதாம்!

கழகக் கூட்டம்

★

ஓ. கொண்டலாம்பட்டி
ரேடியோ மைதானத்தில்
18—12—54 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்: வி. கே. வேங்கடப்பன்
பேசுவோர்:
டி. கே. தாமரைச்செல்வன்
ஈ. ஆர். கிருஷ்ணன்
கே. எஸ். அமுர்தம்

சட்டசபை உறுப்பினர்கள்

உரிமைப் பிரச்னை

பல்லடத்திலுள்ள ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்திரேட், தம்மிடம் 'சம்மன்' ஒன்றை அனுப்பி, அதை, சபை உறுப்பினரான சேனாபதி கவுண்டரிடம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார் எனவும், இவ்விதம் செய்வது உரிமைப் பிரச்சினை என்றும், மாஜிஸ்திரேட் அவ்வாறு நடந்துகொண்டது குற்றமாவதோடு, சட்ட விதிகள் தெரியாமல் நடந்து கொண்டிருக்கலாமெனவும், இதுபோன்று இனியாகிலும் வேறு யாரும் நடந்துகொள்ளாதபடி சர்க்கார் தெரிவிக்க வேண்டும் என்றும் சென்னை சட்டசபை கூட்டத்தின் போது சபாநாயகர் ஜே. சிவசண்முகம் பிள்ளை தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் குறிப்பிடுகையில், சபை நடக்கும்போது, உறுப்பினர்களைக் கோர்ட்டில் சாட்சியாக வரும்படியோ, ஜூரிகளாக இருக்கும்படியோ அழைக்கக் கூடாது என்றார்.

மாஜிஸ்திரேட் கொடுக்கச் சொன்ன அந்தக் கடிதம்பற்றிக் குறிப்பிடுகையில், சபைத் தலைவர், "நான் என்ன அஞ்சல் நிலையமா, 'சம்மனை' வாங்கி சாதரா செய்வதற்கு?" என்று கேட்டார்.

நிதியமைச்சர் சுப்பிரமணியம், இதற்குப் பதிலளிக்கையில், 'இத்தவறுக்கு நான் வருந்துகிறேன்; இவ்விதம் இனிமேல் ஏற்படாமல் சர்க்கார் உத்திரவுகள் பிறப்பிப்பார்கள்' என்றார்.

திருமண மசோதா

டில்லி மேல்சபையில் நிறைவேறியது

இந்து திருமண மசோதா ராஜ்யங்கள் சபையில் ஒருமுகமாக நிறைவேறியுள்ளது.

மசோதா பிரிவு வாரியாக விவாதிக்கப்படுகையில், 'இந்து மண, மண விலக்கு மசோதா' என்றிருந்த பெயர், இப்போது, 'இந்து திருமண மசோதா' எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

"பணம் படைத்த மனைவி, மணவிலக்கு நடவடிக்கையின் போது, வருமானமில்லாத கணவனாயிருந்தால், அவனது பராமரிப்பிற்கு, மனைவி ஜீவனாம்சம் தர வேண்டும்; வழக்காடும் செலவையும் தரவேண்டும்," என கூட்டுத் தனிக்குழு செய்த சிபாரிசையும், ராஜ்யங்கள் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

கணவனுக்கு மனைவி ஜீவனாம்சம் தரவேண்டும் என்ற சிபாரிசு குறித்து பலத்த விவாதம் நடைபெற்றது.

'மனைவிக்குக் கணவன் ஜீவனாம்சம் தரவேண்டும்,' என்கிற திருத்தம் மட்டும் போதுமானது என்று எதிர்க்கட்சியினர் கோரினர் ஆனால் திருத்தம் வாக்கெடுப்பின் போது தோற்றுப்போனதால், அசல் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பீடித் தொழிலாளர்கள் கோரிக்கை

முதலமைச்சர் வாக்குறுதி

சென்னை, டிச. 16—

ஆயிரம் பீடிகள் சுற்றுவதற்கான கூலி ரூ. 1—12—0-ஐ 1—4—3-ஆகக் குறைக்கப்பட்டதை எதிர்த்து, மலபார், தென்கன்னடம், மதுரை, சேலம், வேலூர், வாணியம்பாடி, திருச்சி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களிலிருந்து பீடித் தொழிலாளர்கள், கால் நடையாக 14—12—54-ல் சென்னை வந்து சேர்ந்தனர். சென்னை நகர பீடித் தொழிலாளர்கள் அவர்களுக்கு வரவேற்பளித்ததோடு, அன்று மாலை 6 மணிக்கு ஓர் வரவேற்புக் கூட்டமும் நடத்தினர்.

15-12-54 காலை 10 மணிக்கு, சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஊர்வலமாக சட்டசபை நோக்கிச் சென்றனர். பின்னர், முதலமைச்சர் காமராசரிடம், தொழிலாளர்கள், தங்கள் பிரதிநிதிகளாக தோழர்கள் ப. ஜீவானந்தம், கே. டி. கே. தங்கமணி ஆகியோரை அனுப்பி தங்கள் மகஜரைக் கொடுத்தனர். அந்த மகஜரில், சர்க்கார், தொழிலாளரின் கூலியைக் குறைத்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், வேலைக்கும், கூலிக்கும் சட்டத்தின் மூலம் பாதுகாப்பளிக்கவும், ஆயிரம் பீடிகளுக்குக் கூலியாக ரூ. 2—4—0 நிர்ணயிக்கவும், மாதம் ஒன்றுக்கு 26 நாட்கள் வேலை உத்திரவாதம் தரப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது. முதலமைச்சர் காமராசர், பீடித் தொழிலாளர்களின் எல்லா குறைபாடுகளையும் கவனிப்பதாக வாக்களித்தார்.

தூதுக் குழுவினர் சபாநாயகரைக் கண்டு பேச விரும்பினர். இவ்விஷயம் பற்றி இன்று சட்டசபையில் ஒரு மணி நேர விவாதம் நடைபெறும் என்று அவர் தெரிவித்துவிட்டார். எனவே, தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

சர்க்கார் அனுமதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்படவில்லை என்றும் தணிக்கை அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த நிறுவனத்தின் செலவு அதிகரித்துள்ளதாம்! இப்போது இதன் செலவு சுமார் 63 லட்சம் என்று சொல்லப்படுகிறது.

ஆறு ஆண்டு காலமாக இருந்து வரும் இந்த அமைப்பு, இது வரை **107** கம்பெனிகளுக்கு ரூ. **20,73,75,000** கடன் தந்ததாம். **70** கம்பெனிகள் கடனைப் பயன்படுத்தியதாம்.

தொழில் மூலதன உதவி நிறுவனத்திற்கு இப்போது ரூ. **13,48,841** வட்டி நிலுவை இருக்கிறதாம்.

பல தவணைகளில் திரும்பிப் பெறவேண்டிய கடனில் ரூ. **28,85,815** நிலுவையுள்ளதாம்!

நாட்டில் போக்குவரத்து வாகனங்கள் செல்ல இயலாத பிரதேசங்களில், தபால்-தந்தி இலாகாவைச் சேர்ந்த மொத்தம் 1,04,231 அஞ்சலோடிகள், தபால்களைப் பட்டுவாடா செய்துவருகின்றனர்.



ஏஜண்டுகள் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்புவாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

தஞ்சாவூர்
செங்கற்பட்டு
கும்பகோணம்
விருத்தாசலம்
கடலூர் என். டி.
திருவண்ணாமலை

விவரத்திற்கு:—
நிர்வாகி, 'நம் நாடு.'

வ. ஆற்காடு மாவட்ட கழகத் தலைவர்

ஒரு வாரத்துக்குள் இராஜினாமா செய்ய கட்டளை

வடஆற்காடு மாவட்டக் கழகத் தலைவர் பதவியை இன்னும் ஒரு வாரத்திற்குள் இராஜினாமாச் செய்துவிட வேண்டும் என்று டி. பி. கேசவ ரெட்டியாருக்கு த. நா. கா. செயற்குழு தாக்கீதொன்றைப் பிறப்பித்துள்ளது.

சென்னை மவுண்ட்ரோட், ஆவடி காங்கிரஸ் வரவேற்பு சபை காரியாலயத்தில் நடைபெற்ற த. நா. கா. செயற்குழுக் கூட்டத்தில், அவசியமானால் இதுபற்றிமேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பின்னால் பரிசீலனை செய்துகொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அம்மாவட்டக் கழக துணைத் தலைவர் பதவிக்கு காங்கிரஸ் அபேட்சகர் எவரையும் நிறுத்த வேண்டாம் என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

தலைவர் தேர்தலின்போது காங்கிரஸ் கட்சியின் உத்தியோக பூர்வமான அபேட்சகரை, திரு. கேசவ ரெட்டியார் 11 ஓட் மெஜாரிட்டியில் தோல்வியுறச் செய்ததும் அதையொட்டி, கேசவ ரெட்டி பெருமாள்சாமி (ரெட்டி) ஆகியோர் உட்பட 4 பேர், காங்கிரஸ் கட்சியிலிருந்து 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டதும் நினைவிலிருக்கலாம்.

சிறப்புக் கூட்டம்

சென்னை 17-வது வட்ட (சூளை) தி. மு. கழகச் சார்பில், 12-12-54-ந் தேதியன்று சென்னை பெரம்பூர் லட்சுமி தியேட்டரில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு தோழர் எஸ். எஸ். தென்னரசு தலைமை வகித்தார்.

பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையார், தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சிறப்புக் கூட்டத்தின் மூலம் வசூலான தொகையிலிருந்து, கல்லக்குடி-ஆத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்நீத்த தோழர்களின் குடும்ப நிதிக்காக ரூ. 20 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

விவாதத்திற்கு வரும்

விடுதலை பெற்ற புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதிகளை சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்று கோரி, மாநில சர்க்கார் சிபாரிசுக்குக் கொண்டு வரப்பட்ட தனிப்பட்டோர் தீர்மானம், 'சீட்டுக் குலுக்கி' போடப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பிரச்சினை சட்ட சபையில் விவாதத்திற்கு வரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.,